**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 53/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சரஸ்வதி** | Caste | : | |
| Father/Husband Name | : | **ராசுதேவர்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(All Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.04.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது மீனாட்சிபட்டியில் குடியிருந்து வருகிறேன். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். நான் கடந்த 2017 வருடம் எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.09.2017 ஆம் தேதி காலை சுமார் 07.10 மணிக்கு எதிரிகள் தாங்கள் புதியதாக வாங்கிய இடத்தில் விவசாயம் செய்வதற்காக அவர்களுக்கு பாத்தியப்படாத பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துகொண்டிருந்தார்கள் என்றும், அதை நான் தட்டி கேட்டபோது, எதிரிகள் அனைவரும் சேர்ந்து, கம்பி, மண் வெட்டி, கடப்பாறை மற்றும் கம்பு ஆகியவற்றை வைத்துகொண்டு என்னை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி, மண் வெட்டியால் தாக்கியதில் எனக்கு இடது காதில் காயம் ஏற்பட்டது என்றும், அதை தடுக்க வந்த எனது மகளையும் அடித்து காயம் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக கூறி, எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளித்துவிட்டு, தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவருடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதான மனு **(எ.த.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் நடந்தபோது எனது மகள் செல்வி சம்பவ இடத்தில் இல்லை என்றாலம், அவருக்கு எந்த ஒரு காயமும் இல்லை என்றாலும், சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் சரிதான்